சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 76/2021

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 05.11.2025

Pw2(கிருஷ்ணமூர்த்தி)

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)**

தங்கராஜ் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தாயாரின் தாய்மாமன் மகன். தாவா சொத்து பெருந்துறை குன்னத்தூர் சாலையில் அமைந்துள்ளது. உயில் ஏற்படுத்துவதற்கு முன்பு என்னை கொழந்தசாமி கவுண்டர் அழைக்கவில்லை,உயில் தேதியன்று தான் அழைத்தார். தற்போது தாவா சொத்தின் முன்பகுதியில் கடையும் பின்பகுதியில் வீடும் உள்ளது என்றால் சரிதான். உயில் ஏற்பட்ட காலத்தில் ஓடு வேயப்பட்ட கடையும், வீடும் இருந்தது. தற்போது அனைத்தும் தார்சு கட்டிடங்களாக உள்ளது. 2000 ஆண்டு தங்கராஜ் அந்த சொத்தில் தான் குடியிருந்தார். 2000 ம் ஆண்டு தங்கராஜ்க்கு திருமணம் ஆகவில்லை. கொழந்தசாமி கவுண்டர் என்னை அழைத்தபோது தங்கராஜ் மற்றும் துரைசாமி ஆகியோர் அங்கு இல்லை. நான் கொழந்தசாமிஅழைத்தபோது அவரிடம் சென்றபோது உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் வேண்டும் அதனால் வா என்று அழைத்தார். அப்போது அவர் உயில் தயார் நிலையில் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொழந்தசாமியின் வீட்டிற்கு சென்றபோது கொழந்தசாமியின் மனைவியும் மற்றும் ஒரு சத்தியசீலன் என்பவரும் அங்கிருந்தனர். சத்தியசீலன் யார் என்று எனக்கு தெரியாது. அதற்கு பின்னால் நான் அவரை பார்க்கவில்லை. உயில் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் 2 தாள்களை கொண்டது. உயில் தயாரிப்பதற்கான வாசகங்கள் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் பத்திர எழுத்தர் கோபாலகிருஷ்ணன் சொன்னார். நான் சென்றபோது உயில் ஆவணம் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தது. உயில் ஆவணத்தில் நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் உயில் ஆவணத்தில் ஒரு கையொப்பமும், பத்திர அலுவலகத்தில் ஒரு கையொப்பமும் செய்தேன். சொத்து விவரம் படித்துக்

காண்பிக்கப்பட்டதா என்றால் 2-1/2 சென்ட் விஸ்தீரண நிலத்தில் சுமார் 270 சதுரடி நிலத்திற்கு உயில் எழுதப்பட்டது. கோபாலகிருஷ்ணன் உயிருடன் உள்ளார். என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் அழைப்பாணை பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்தேன். அழைப்பாணை பெற்ற பின் நான் தங்கராஜை சந்தித்து பேசினேன் என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் வழக்கறிஞர் அலுவலகத்தில் சொன்னதன் பேரில் தயாரிக்கப்ப்டடது. அப்போது தங்கராஜ் அங்கு இல்லை. தங்கராஜின் வழக்கஞறிஞர் எனக்கு தெரியும் என்பதால் நான் அங்கு சென்றேன். அழைப்பாணை வந்த பின் தங்கராஜிடமிருந்து உயில் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் பெற்று உயில் விவரங்களை தெரிந்து கொண்டேன். உயில் ஆவணம் எழுதுமபோது கொழந்தசாமிக்கு மற்றொரு மகன் பிரதிவாதி உள்ளார் என்பது எனக்கு தெரியும். உயில் எழுதிய காலத்தில் கொழந்தசாமிக்கும் துரைசாமிக்கும் நல்ல உறவு முறை இருந்ததா என்றால் இல்லை, இருவரும் பேசிக் கொள்ள மாட்டார்கள். தற்போது தாவா சொத்து முழுவதும் தார்சு கட்டிமாக உள்ளது. தற்போது 270 சதுரடி உள்ள நிலம் மற்றும் முதல் தளத்தில் தார்சு கட்டிடம் உள்ளது. மேல் தளத்தில் முழுவதும் பிரதிவாதி குடியிருக்கிறாா என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் 22.3.2000 த்தில் கொழந்தசாமி என்னை அழைத்ததாகவும் அதன்பேரில் நான் உயில் சாசனத்தில் சாட்சியாக இருந்து கையொப்பமிட்டதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2025.11.05 18:18:04 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS